www.padippakam.com


# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

பிரான்ஸ் கிளை

# Thamil Eelam Liberation Organization

BRANCH OF FRANCE

தலைமையகம் : தமிழ் ஈழம் HEAD QUARTERS : THAMIL EELAM


## வீர அஞ்சலி

### செல்லத்துரை-பாலச்சந்திரன். (மேஜர் சுகி)



மலர்வு : 25-8-61

உதிர்வு : 4-4-1986



தமிழினத்தின் விடுதலைக்காக தமிழீழ விடுதலை இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்து முழு நேரமும் ஈழ மக்களுக்காக சிந்தித்து, ஈழ மக்களுக்காக போராடிய மேஜர் சுகி என அழைக்கப்படும் தோழர் செல்லத்துரை பாலச்சந்திரன் வீரமரணம் எய்தினார்.

★ 1982 லேயே தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் சேர்ந்து முன்னணிப் போராளியாக விளங்கினார்.

★ விடுதலைப் பாசறைகளில் வழிகாட்டியாக இருந்த இவர் நவீன ஆயுதங்களில் பயிற்சி பெற்று சிறந்த பயிற்சியாளராகவும் விளங்கினார்.

★ சிறிலங்கா ராணுவத்திற்கெதிராக டெலோ போராளிகள் கண்ட களங்கள் பலவற்றில் முன்னின்று போராடினார்.

தோழனே, நீ மரணமடையவில்லை<br>
உன் சிந்தனைகள் எண்ணங்கள்<br>
ஆயிரம் ஆயிரம் உன் தோழர்களிடம்<br>
நிலைத்திருக்கிறபோது

தோழனே நீ மரணமடையவில்லை<br>
உன் கருவிகள் பயிற்சிகள்<br>
ஆயிரம் ஆயிரம் உன் தோழர்களிடம்<br>
நிலைத்திருக்கிறபோது

தோழனே நீ மரணமடையவில்லை.



TELO, 5 RUE DE L'ORILLON, 75011 PARIS. Tel:-

படிப்பகம்

www.padippakam.com

## அராஜக வாதிகளை இனங்காணுவோம்.

தமிழ் ஈழ தேசிய விடுதலை போராட்டம் இன்று ஒரு நெருக்கடியான கட்டத்தை எட்டியுள்ளது. இதுவரை தரைமார்க்கமாக நோந்தவந்து அப்பாவித்தமிழர்களைக் கொன்றுகுவித்துவந்த சிறிலங்கா கூலிப்பட்டாளங்கள் இன்று தமிழ் போராளிகளின் எதிர்த்தாக்குதலிற்கும், கண்ணிவெடித்தாக்குதல் களிற்கும் நின்றுபிடிக்க முடியாமல் அவர்களின் முகாம்களிற்குள் முடங்கிக் கிடந்தமை எமது போராட்டத்திற்கு ஒரு வெற்றியாகும். அதேசமயம் வேறுவழியின்றி ஆகாய மார்க்கமாக விமான, ஹெலிகொப்டர் குண்டுவீச்சுக்கள் மூலம் அப்பாவி மக்களை அழித்து வருகிறது சிறிலங்கா இனவெறியரசு. இவ்வாறான இனப்படுகொலையை இந்திய அரசு வன்மையாகக் கண்டித்து எச்சரித்துள்ளது, இந்நிலையில் விமானத்தாக்குதல்களிலிருந்தும் எமது மக்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வரும் எமக்கு சில அராஜகக் குழுக்களினால் ஏற்படுவரும் தடங்கல்களை அம்பலப்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருப்பதையிட்டு மனம் வருந்துகிறோம்.

ஒரு தேசிய விடுதலை இயக்கத்தில் இணைந்துகொண்ட சிலர் சந்தர்ப்பவாதிகளாக மாறி சில அராஜகவாதிகளுடன் இணைந்தோ அல்லது அவர்களினால் வழிநடாத்தப்பட்டோ தேசிய விடுதலை போராட்டத்திற்கு எதிராக சதி முயற்சிகளில் ஈடுபட்டமையை பல தேசிய விடுதலை இயக்கங்களின் வரலாறு கண்டுள்ளது. இவ்வாறான முயற்சிகள் ஒருபோதும் வெற்றிபெறவுமில்லை, மக்கள் ஆதரவைப் பெற்றதுமில்லை. இவ்வாறான முயற்சியொன்று 1984இன் முற்பகுதியில் TELO வில் நடைபெற்றது. சுதன், ரமேஷ் என்பவர்கள் தமிழ் ஈழமே தமது தாகமெனக்கூறிக்கொள்ளும் புலிகளின் ( LTTE ) கருவியாக மாற்றப்பட்டு எமது தலைவர் சிறிசபாரத்தினத்தை கடத்தி கொலைசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது தோற்றுப்போகவே எமது இயக்கத்திலிருந்து சிலரைப் பிரித்தெடுத்து அவர்கள் மூலமாக இச்சதி முயற்சியை ஒரு உட்கட்சி பிரச்சனையாகக் காட்டி இயக்கத்திற்கெதிராக மக்கள் ஆதரவைப் பெற முயற்சித்துத் தோற்றுப்போயினர். இச்சம்பவத்தையிட்டு தான் சங்கடப்படுவதாக புலிகளின் ஆலோசகரான தோழர் பாலசிங்கம் புலிகள் ENLF இல் இணைவதற்குமுதல் நடந்த கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

அண்மையில் தமிழீழத்தில் நெல்லியடிப்பகுதிக்குப் பொறுப்பாக இருந்த தாஸ் என்பவரிற்கும் யாழ்ப்பாணப்பகுதிக்குப் பொறுப்பாக இருந்த பொபி என்பவரிற்குமிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் தொடர்பாக இருதரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருந்த சமயம் எமது இயக்கத்தில் இருந்து தாஸ் தலைமையில் 2500பேர் வெளியேறி விட்டதாக புலிகள் செய்தபிரச்சாரத்தில் குழம்பியிருந்த மக்களை தெளிவுபடுத்தும் முகமாக நாம் 20.11.85அன்று வெளியிட்ட அறிக்கையில், "இவர்களில் எவரும் இயக்கத்தைவிட்டு வெளியேறவுமில்லை, இயக்க தலைமை பீடத்திற்கு எதிராக செயற்படவுமில்லை, ஆனால் முன்பு நடந்த சுதன், ரமேஷ் பிரச்சனையில் தொடர்புடைய ஒரு சில தீயசக்திகள் சில தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களைச் சரியாக நாம் நிச்சயம் இனங்கண்டுகொள்வோம், இச்சம்பவங்களிற்குச் சரியான நடவடிக்கைகள் எடுத்து மிகவிரைவில் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்துவோம்!" என்று குறிப்பிட்டிருந்தோம். உண்மையில் நடந்த சம்பவங்கள் இவைதான்.

தமிழ் ஈழத்தில் ஒவ்வொரு மாவட்டப்பொறுப்பாளர்களிற்கும் மிக முக்கியமான நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகள் தொடர்பாக முடிவு (on the spot decision ) எடுப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதனைப்பயன்படுத்தி தம்மை மார்க்சிய வாதிகளெனக்கூறிக்கொள்பவர்களான சிவம், சிவராஜா, ரத்னம்போன்றோரினால் தவறான பாதைக்கு இட்டுச் செல்லப்பட்ட தாஸ் இனால் 1985 பங்குனிமாத முதல் தொடர்ச்சியாக பல கொலைகள், கொள்ளைகள் மேற்கொள்ளப்பட்டன, இவற்றை விமர்சித்து கைவிடுமாறு கூறி வந்ததால் மாவட்டப்பொறுப்பாளர்களின் கூட்டங்களில் (Senate) தோழர் பொபிக்கும், தாஸ் இற்கும் முரண்பாடுகள் வளர்ந்து வந்தன, இதற்கு உச்சக்கட்டமாக இயக்கத்தின் பெயரிற்கு களங்கமேற்படுத்தும் முகமாக வேண்டுமென்றே சில கொலைகள், ஆட்கடத்தல்கள் போன்றவை இவர்களால் மேற்கொள்ளப்பட்டன.

அவையாவன:-

1. தொடர்ச்சியான ஏழு சாராயலொறிக் கொள்ளைகள்.
2. யாழ் கூட்டுறவு சிகரெட் வான் கொள்ளை.
3. லொறியில் வந்த உணவுப்பொருட்கள் கொள்ளை.
4. கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி லேத் மெசின் கொள்ளை.
5. சுழிபுரம் ராஜசுந்தரம் கொலை.
6. மல்லாகம் தேசியநாதன் கொலை.
7. கிளிநொச்சி P.M.C ஊழியர் கொலை.
8. கல்வியங்காடு ரஜனி கொலை.
9. எம்.ஜி.எம் வீதி லொறிக் கொள்ளைகள்.
10. பல பெற்றோல் டீசல் லொறிக் கொள்ளைகள்.
11. சிவகடாட்சம், செல்லப்பாவின் மகன் சிறி இவைபோன்ற பல ஆள்கடத்தல்கள்.

இவ்வாறான சம்பவங்கள் ஸ்தாபனக் கட்டுப்பாட்டை மீறுவதாகவும், எமது ஸ்தாபனத்தை ஒழுங்கீனமானதாகக் காட்டுவதாகவும் அமைந்திருந்ததால் தலைமைப்பீடம் இவர்களுடன் இடைவிடாது பேசி வந்தது.

படிப்பகம்

www.padippakam.com

கடந்த இரண்டு மாதங்களாக இவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியும் இவர்களிடமிருந்த ஆயுதங்களை ஒப்படைக்கக் கோரியும் வந்தோம். ஆனால், இவை அலட்சியம் செய்யப்பட்டன, தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்த்தப்பட்டன.

இது இவ்வாறிருக்க அண்மையில் தவறுதலாக கிறனேட் வெடித்து காயமுற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த எமது முக்கியதோழர் ஒருவரிற்கு பாதுகாப்பாக எமதுதோழர்கள் ( Sentry ) நின்று கொண்டிருந்தனர், இதே சமயம் அங்கு ஆயுதங்களுடன் 11 பேராக வந்த தாஸ் குழுவினர் எமது தோழர்களுடன் பிரச்சனைப்பட்டதால் காவலுக்குநின்ற தோழர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. இதில் தோழர் தாஸ் உட்பட பீற்றர், காளி, கிரிசாந், மோகன் ஆகியோர் கொல்லப்பட்டனர், தவறுதலாக இடையில் குறுக்கிட்ட நீதபதி கிருபாகரனும், அகால மரணமடைந்தார். இத்துர்ச் சம்பவத்தில் இறந்த அனைவரிற்கும், காயமடைந்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், மனவருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதில் மரணமடைந்த ஐவரும் தவறான வழியில் வழிநடாத்தப்பட்டவர்களாயிருப்பினும் அவர்கள் ஒரு பொது எதிரிக்கெதிராக எம்முடன் இணைந்து செயற்பட்டதை நாம் மறக்கவில்லை. அவர்களின் மரணத்தை நாம் விரும்பவில்லை, அராஜகவாதிகளை மக்கள் மத்தியில் இனங்காட்டுவதன் மூலமே அவர்களைத் தனிமைப்படுத்த முடியும். ஆனாலும், இவர்கள் நடந்து கொண்ட முறையின் காரணமாக இவர்கள்மீது நாம் நடவடிக்கை எடுக்கவேண்டியேற்பட்டது. ஆனால் ஒருசில தனிநபர்கள் இச்சம்பவத்தை யொட்டி ஒரு பகுதி தமிழ் மக்களை எம்மீது வெறுப்படைய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

12.03.86அன்று ஆயுதமேந்திய மேற்படி சில தனிநபர்கள் நெல்லியடி பகுதியை சேர்ந்த ஒரு பகுதி மக்களைத்திரட்டி (சுமார் 150பேர்) இயக்கத்திற்கெதிரான கோஷங்களுடன் ஊர்வலமாக வந்தனர், இதனைக் கைவிடுமாறு நாம் கோரியும் அவர்கள் கேட்கவில்லை. யாழ் பேருந்து நிலையத்திலிருந்து நல்லூர் முத்திரைச் சந்தையடி வரை வந்தவர்கள் அங்கு எமது தலைவரின் பாதுகாப்பையொட்டி ( Sentry ) காவல் நின்ற எம் தோழர்கள்மீது கற்களால் வீசித்தாக்குதல் நடாத்தினார்கள், எமது தோழர்கள் வானை நோக்கிச் சுட்டு எச்சரித்தபோது அவ் ஊர்வலத்தில் ஆயுதங்களுடன்வந்த ஒரு சிலர் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர், தற்பாதுகாப்பிற்காக எமது தோழர்களும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே இச்சமரில் தவறுதலாக இரண்டுபொது மக்கள் பலியானார்கள். இதனைத்தொடர்ந்து அந்த ஊர்வலம் கலைந்து சென்றது, இத்துர்ச்சம்பவத்தில் மரணமடைந்த இருவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதுபோன்ற சம்பவங்கள் மேலும் நிகழாதவாறு இருக்க நாம் முயற்சிகள் செய்தோம் ஆனால் ஒருசிலர் இதனை விரும்பவில்லை.

மீண்டும் 13.03.86 அன்று யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த மேற்படி பொது மக்களின் உடல்களை ஆர்ப்பாட்ட ஊர்வலமாக எடுத்துச் செல்ல முடிவு செய்தனர். ஆனால் இதே நாளில் தாஸ் குழுவினரின் மேற்படி நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களும் மேற்படி சம்பவங்களை விரும்பாதவர்களுமாக சுமார் ஆயிரம் பேர்க்கு மேற்பட்டோர் பழஞ்சந்தியிலிருந்து யாழ் வளாகம் வரை ஊர்வலமாகச் சென்று இவர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டதைத் தொடர்ந்து இம் முடிவைக் கைவிட்டனர். மேற்படி பிரேத ஊர்வலம் மௌன ஊர்வலமாகச் சென்றது, இதன் பின்னர் இதுபோன்ற பிரச்சனைகள் எதுவும் இடம்பெறவில்லை.

நடந்த உண்மைகள் இவ்வாறிருக்க இது சம்மந்தமாக மிகைப்படுத்தப்பட்ட செய்திகளை புலிகள் ( LTTE ) தமது தகவற் சேவையிலும் வேறிடங்களிலும் கூறி மக்களைக் குழப்பத்திலாழ்த்தி வருகிறார்கள், தம்மால் செய்யப்பட்ட சமூக விரோத செயல்களை இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எம் தலையில் கட்டி விடப் பிரயத்தனம் எடுத்து வருகின்றனர்.

மிகவும் கேவலமான, படு பிற்போக்குத் தனமான ஆலால், தருமர் படுகொலைகளை TELO தான் செய்ததென்று புலிகள் நேரடியாக குற்றம் சாட்டி வருகின்றனர். ஆனால், இச் செயலை பகுத்தறிவுள்ள மனிதர்கள் எவரும் செய்திருக்க மாட்டார்களென்பதையும், உண்மையில் எந்த மிருகக்கூட்டம் செய்ததென்பதையும் மக்கள் நன்கு அறிவர்.

இதுவரை எந்த ஒரு கோவிற் கொள்ளையிலும் TELO சம்பந்தப்படவில்லை. துர்க்கை அம்மன், பெருமாள் கோவில் கொள்ளைகளை ஏற்கனவே அம்பலப்படுத்தியிருந்தோம். இவற்றைத் தொடர்ந்து கோயில்களிற்கு காவல் ( Sentry )போட்டிருந்தபோது அண்மையில் நல்லூர் கந்தசாமி கோவிலில் அங்கு வானில்வந்த புலிகளிற்கும் எமக்கும் இடையே நடந்த சம்பவத்தின் உண்மைகளை ஏற்கனவே வெளியிட்டிருந்தோம்.

இவை தவிர்ந்த வேறு சில சமூக விரோதச் செயல்களையும் பட்டியல்போட்டு புலிகள் பகிரங்கமாக TELO மீது குற்றஞ்சாட்டிவருகின்றனர். நாம் சிலகாலம் தாஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட அசம்பாவிதங்களை மேலே அம்பலப்படுத்தி உள்ளோம். அது போன்ற செயல்கள் இனியும் நடைபெறாதென்பதற்கும் உறுதியளிக்கின்றோம்.

இந்நிலையில் E.N.LF இல் இருந்து கொண்டு சந்தர்ப்பத்திற் கேற்றவாறு நாம் E.N.L.F இல் உண்டு, இல்லை என்று கூறி தொடர்ச்சியாக ஒற்றுமைக்குப் புறம்பான வேலைகளில் ஈடுபட்டு வரும் புலிகளையிட்டு மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

இவர்கள் அனைத்து இயக்கங்களுடனும் தொடர்ச்சியாக முரண்பட்டு வருகிறார்கள். தம்மை ஒரு கட்டுக் கோப்பான ஒழுங்கான இயக்கமாகப் பறை சாற்றி வரும் இவர்கள் அண்மையில் EPRLF தோழர்களுடன் நடந்துகொண்ட முறை படுகேவலமானது. யாழ் கோட்டை மீது தாக்குதல் நடத்த வந்தார்களென்று கூறி அவர்கள்மீது எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டு ஒருவரைக் கொலை செய்ததுடன் அது சம்பந்தமாக தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சனையில் EPRLF இன் முகாமிற்குச் சென்று அங்கிருந்து கைது செய்து சென்ற 03 EPRLF பெண் தோழர்களுடன் முறைகேடாக நடந்துள்ளதை மன்னிக்க முடியாது.

அண்மையில் ஜனவரி மாதமளவில் அரியாலையைச் சேர்ந்த தம்முடைய ஆதரவாளரான முதலாளி ஒருவருடன் முரண்பட்ட காரணத்தால் PLOT ஐச் சேர்ந்த நிராயுதபாணியான தோழர்கள் ரவிமூர்த்தி, ரவீந்திரன் என்பவர்களை தெருவில் வைத்து தனிப் புலியான ரிச்சர்ட் என்பவர் ரிவால்வரால் சுட்டுக் கொன்றுள்ளதையும் மக்கள் அறிவார்கள், வெறும் ஆயுதத்தைக் காட்டியே அனைத்தையும் சாதிக்கலாம் என நினைக்கும் இவர்கள் மக்களின் சக்தியை உணராதவர்கள், இதுபோன்ற புலிகளின் ஒற்றுமைக்குப் புறம்பான வேலைகளைப் பட்டியல் போட்டால் அது நீண்டு கொண்டேபோகும். அது எமது நோக்கமல்ல இவற்றை வெளியே தெரியாதவாறு மழுங்கடிக்கச் செய்யும் புலிகளையிட்டு மக்களை விழிப்படையச் செய்யவே ஒரு சில உதாரணங்களைக் குறிப்பிட்டோம்.

நாம் ஒற்றுமைக்கு எதிரானவர்கள் அல்ல என்பதை எமது கடந்தகால நடவடிக்கைகள் மூலம் நிரூபித்துள்ளோம். இன்றும் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து அதற்காக உழைக்கத் தயாராகவுள்ளோம். ஆனால், ஒற்றுமை என்ற போர்வையில் ஒற்றுமைக்குப் புறம்பான கீழ்த்தரமான வேலைகளைச் செய்து வரும் அராஜகக்கும்பல்களை மக்கள்முன் அம்பலப்படுத்தி அவர்களிலிருந்து அந்நியப்படுத்த வேண்டியது உண்மையான விடுதலை இயக்கங்களின் கடமையாகும்.

மேற்கூறிய உண்மைகளை ஆராய்ந்து மக்கள் சரியான பாதையில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் சக்திகளை இனங்கண்டு ஏனையவற்றை போராட்டப்பாதையில் இருந்து அந்நியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

"உண்மைக்கு மேடையோ அன்றி வெளிச்சமோ போட்டுக் காட்ட வேண்டியதில்லை, அது மகத்தானது, அது வெளிவருவதை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது".

— தமிழ்த் தேசத் தந்தை.

— தமிழ் ஈழ விடுதலை இயக்கம், (04.04.1986).

TELO

BRANCH OF FRANCE

படிப்பகம்